செய்தி வெளியீடு எண்: 524 நாள்: 20.07.2020

# மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்களின் அறிக்கை

**நாள் 20.7.2020**

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா நோய் தொற்று தொடர்பாக அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் துரிதமாக எடுத்ததன் காரணமாகத்தான் இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் நோய் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்புபவர்களின் சதவீதம் அதிகமாகவும், இறப்பு விகிதம் மிகக்குறைவாகவும் இருந்து வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாட்டு மக்களை இத்தொற்றிலிருந்து மீட்கும் பணியில் நேர்மையுடனும், துணிவுடனும், எந்தவித சமரசமும் இன்றி, மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மின்சாரம் என்பது மக்களின் அத்தியாவசிய தேவை என தற்போது கூறும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், முந்தைய திமுக ஆட்சியின் மெத்தனத்தால் நிலவிய கடுமையான மின்வெட்டின் காரணமாக, தமிழ்நாடே இருளில் மூழ்கி இருந்ததை மறந்துவிட்டு சந்தர்ப்பவாத அரசியல் மட்டுமே செய்து வருகிறார். மாண்புமிகு அம்மாவும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும், கடந்த 10 ஆண்டுகளாக எடுத்துவரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளால் மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம்

இல்லாத வகையில், தமிழ்நாட்டில் தரமான மின்சாரம் தங்குதடையின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி, தமிழ்நாடு தொடர்ந்து மின்மிகை மாநிலமாகவும் திகழ்ந்து வருகின்றது.

கொரோனா தொற்று பரவாமல் இருக்கத்தான், ஊரடங்கு அமலில் உள்ளது. இந்த ஊரடங்கு நடைமுறை தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், பிற மாநிலங்களிலும், பல்வேறு நாடுகளிலும் நடைமுறையில் உள்ளது. தொற்று பரவாமல் இருக்க வேண்டும் என்ற காரணத்தால் தான், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக பணியாளர்கள் வீடுதோறும் சென்று மின் கணக்கீடு செய்யவில்லை. அதற்கு பதில், தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்கள் (LT Service), தங்களுடைய ஜனவரி–பிப்ரவரி மாத கணக்கீட்டு பட்டியலின்படி, மார்ச்–ஏப்ரல் மாதங்களுக்கு மின் கட்டணத்தை செலுத்துமாறு கோரப்பட்டது.

தற்போது, தளர்வுகளுடன் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளதால், மின் கணக்கீடு செய்யும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த மின் அளவீடு 4 மாதங்களுக்கு உள்ள மின் பயன்பாடு என்பதால்,

- நான்கு மாத காலத்திற்கான மின் நுகர்வு, இரண்டு மாதங்களுக்கான (bi-monthly) வீதப்பட்டி அடிப்படையில் சமமாக பிரிக்கப்பட்டுள்ளது.

- அந்த மின் நுகர்வு இரண்டு மாதங்களுக்கான வீதப்பட்டிப்படி மின் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கணக்கீடு செய்யும்பொழுது ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கான நுகர்விலும், மாண்புமிகு அம்மா அவர்கள் 2016ம் ஆண்டு முதல் கொண்டு வந்த 100 யூனிட்டுகள் இலவச மின்சாரப் பயனை அனைத்து வீட்டு மின் உபயோகிப்பாளருக்கும் வழங்கிய பின்பு கணக்கீடு செய்து, மீதம் செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகையில், ஏற்கனவே மார்ச்–ஏப்ரல் 2020 மாதங்களில் முந்தைய மாத மின் கணக்கீட்டின்படி செலுத்தப்பட்ட தொகையானது கழிக்கப்பட்டுள்ளது.
- மேலே கூறியபடி கணக்கீடு செய்ததில் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை அதிகமாக இருப்பின், நுகர்வோரின் எதிர்வரும் கணக்கீட்டில் அந்தத்தொகை சரி செய்யப்படும்.

மேற்கண்ட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கணக்கீட்டு முறை தவறு என தாக்கல் செய்யப்பட்ட பொது நல வழக்கில், மேற்குறிப்பிட்ட கணக்கீட்டு முறை சரியானது என்பதனை மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் ஏற்றுக்கொண்டு தீர்ப்பு அளித்துள்ளது. அதுமட்டுமல்லாமல், மேற்கண்ட கணக்கீட்டு முறையினால் தான், ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கான

கணக்கீட்டிலும், தனித்தனியே 100 யூனிட் இலவச மின்சாரம் நுகர்வோருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் சென்னை உயர்நீதி மன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. இவ்வாறு கணக்கீடு செய்தது விதிகளுக்கு உட்பட்டதே என்றும், அது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நேர்மைத் தன்மையைக் காட்டுகிறது எனவும் மாண்புமிகு உயர்நீதி மன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கணக்கீடு குறித்து பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்களை தீர்க்கும் வகையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், ஒவ்வொரு நுகர்வோரும் தனித்தனியே அவர்களுடைய கணக்கீட்டு முறையை வெளிப்படையாகவும், தெளிவாகவும் காணும் வகையில் தனது இணயதளத்தில் வெளியிட்டுள்ளது. கணக்கீட்டில் சந்தேகம் ஏதும் இருக்கும் பட்சத்தில், நுகர்வோர்கள் இணையதளத்தில் சரிபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு உயர்நீதி மன்றம் தெள்ளத்தெளிவாக தனது தீர்ப்பைக் கூறிய பிறகும், மின்சாரக் கட்டணம் குறித்த கணக்கீட்டு விவரம் இவ்வாறு மிகத் தெளிவாக இணையதளத்தில் வெளியிட்ட பின்னரும், மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் திரும்பத்திரும்ப ‘‘மின்சார ரீடிங் எடுத்ததில் பல்வேறு குளறுபடிகள் உள்ளன என மக்கள் கூறுகின்றனர்’’ எனவும் ‘‘தவறான அடிப்படையில் கணக்கீடு’’ எனவும், ‘‘மின்சார வாரியத்திற்கு இலாபம்’’ எனவும் உண்மைக்கு மாறான செய்தியை

கூறிக்கொண்டிருப்பது, மக்களை குழப்ப முயல்வதுதான். ஆனால், அவரது எண்ணம் ஈடேறாது. இது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் செய்யும் சந்தர்ப்பவாத அரசியலின் உச்சகட்டம்.

எதிர்க்கட்சித் தலைவர், தன்னுடைய தொலைக்காட்சி பேட்டியில், அதிக மின் கட்டணம் சம்பந்தமாக சில ஆவணங்களை காண்பித்தார். அவற்றில் ஒன்றில் மட்டுமே, நுகர்வோரின் விவரம் தெளிவாக தெரிந்ததனால், அதை மின்சார வாரியம் ஆய்வு செய்தது. அந்த ஆய்வில், அந்த நுகர்வோர், வீட்டு மின் நுகர்வோர் இல்லை எனவும், தொழில் மின் நுகர்வோர் எனவும் தெரிய வந்தது. தொழில் மின் நுகர்வோர் அட்டையை காண்பிப்பது, மக்களை திசை திருப்பும் காரியமாகும். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மின் கணக்கீட்டு வீதப்பட்டி, அதாவது slab-ஐ மாற்றி மின் கட்டணத்தை ஏற்றி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இலாபம் பார்க்க வேண்டும் என்று மின் கணக்கீடு செய்வதுமில்லை; அதேபோல இலாப நோக்கத்தை கருத்தில் கொண்டு வீட்டு மின் நுகர்வோர்களுக்கு மின்சாரம் விநியோகிப்பதும் இல்லை. எந்த ஒரு அரசும், வீட்டு மின் நுகர்வோர்களுக்கான கணக்கீட்டின் மூலம் இலாபம் பார்க்க வேண்டும் என்று செயல்படுவதில்லை.

இந்த அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள், வீட்டு மின் நுகர்வோர்களுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் அளித்தார் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நினைவில் கொள்ள

வேண்டும். தமிழ்நாட்டில், வீட்டு மின் நுகர்வோர்களுக்கான தற்போதைய மின் கட்டணம், அதன் உற்பத்தி செலவை விட மிக, மிக குறைந்த அளவிலேயே உள்ளது. மேலும், அண்டை மாநிலங்களை விட தமிழ்நாட்டில் மின் கட்டணம் மிகக் குறைவாக உள்ள நிலையில், கட்டணத்தை அதிகப்படுத்தி இருக்கிறார்கள் என்பதும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இலாபம் பார்க்கின்றது என கூறுவதிலும், எள்ளளவும் உண்மை இல்லை.

முந்தைய திமுக ஆட்சியில் இருண்ட மாநிலமாக இருந்த தமிழ்நாட்டை, தொலைநோக்குடன் தனது திடமான செயலாற்றலால், மின்மிகை மாநிலமாக மாற்றி ஒளிரச்செய்த மாண்புமிகு அம்மா அவர்கள், 2016ல் வரலாற்று சிறப்புமிக்க வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைத்தவுடன், ஒவ்வொரு வீட்டு மின் நுகர்வோருக்கும் 100 யூனிட் மின்சாரத்தை இலவசமாக வழங்க ஆணையிட்டார்கள். இதன்மூலம் சுமார் 2.1 கோடி குடும்பங்களுக்கு மேல் பயன்பெற்று வருகின்றனர். இந்தச் சலுகை மக்களுக்கு வழங்கப்பட்ட பெரிய சலுகையாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரியவில்லையா ? இந்தச்சலுகையினால் மின்சார வாரியத்திற்கு ஏற்படும் செலவை ஈடுகட்ட, வருடத்திற்கு சராசரியாக 2,878 கோடி ரூபாய் கடந்த 4 வருடங்களாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. **இதன்பொருட்டு இந்த 4 வருடங்களில் 11,512 கோடி ரூபாய்**

**தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்த சலுகை இந்தியாவில் உள்ள எந்த மாநிலங்களிலும் இல்லாத சலுகையாகும்.** பேரிடர் காலத்தில் மட்டுமல்லாமல், அனைத்து காலங்களிலும், தொடர்ந்து 4 ஆண்டுகளைக் கடந்து, பொதுமக்களின் நன்மை கருதி இந்தச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. இது, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் அறிந்த விஷயம். மேலும், 100 யூனிட்டிற்குள் மின் நுகர்வு செய்யும் சுமார் 70 லட்சம் ஏழை, எளிய சாமானிய குடும்பங்களுக்கு விலையில்லா மின்சாரமே வழங்கப்பட்டு வருகிறது. இந்த சலுகை திமுக ஆட்சிக்காலத்தில் கொடுக்கப்பட்டதா? அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மேற்கோள் காட்டும் கேரளா, மஹாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேசத்தில் கொடுக்கப்படுகிறதா என்பதை அவரே தெளிவுபடுத்த வேண்டும்.

ஆனால், இதனை பாராட்ட மனமில்லாத எதிர்கட்சித் தலைவர் அவர்கள், கொரோனா காலத்திற்கு மட்டுமே வெறும் 80 யூனிட்டுகள் சலுகையாக வழங்கும் கேரளத்தைப் போன்றும், மின் கட்டணத்தில் 5–7 சதவீதம் மட்டுமே குறைத்து சலுகை வழங்கும் மகாராஷ்டிராவைப் போன்றும் தமிழ்நாட்டில் வழங்க வேண்டும் என்கிறார்.

தமிழ்நாட்டில் வீட்டு பயனீட்டாளர்கள் அனைவருக்கும், முதல் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது, மேலும், 300

யூனிட் பயன்படுத்தும் குடும்பங்கள் **500** ரூபாய் செலுத்தினால் போதும். ஆனால், இதேபோல் **300** யூனிட் பயன்படுத்தும் குடும்பங்கள் கேரளாவில் **1,165** ரூபாயும், மகாராஷ்டிராவில் **1,776** ரூபாயும் கட்டணமாக செலுத்துகின்றனர். எனவே, தமிழ்நாட்டில் தான் வீட்டு உபயோகத்திற்கு மின் கட்டணம் மிக மிக குறைவாக உள்ளது.

தமிழ்நாட்டை விட மிக அதிக வீட்டு மின்கட்டண விகிதப்பட்டி உள்ள மகாராஷ்டிரா மற்றும் கேரளத்தை மேற்கோள் காட்டுவதன் மூலம் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் போராட்டம் நடத்த விரும்புகிறாரா? அவர்களைப் போல் தமிழ்நாட்டிலும் மிக அதிக மின் கட்டணம் வசூலிக்க வேண்டும் என மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் விரும்புகிறாரா ? பொதுமக்களுக்கு தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வாரி வழங்கும் மின் சலுகைகளை மறைத்து, பிற மாநிலங்களில் கொடுக்கப்படும் சிறிய அளவிலான சலுகைகளைப் பற்றிக் கூறுவது "**கனி இருப்ப காய் கவர்ந்தது**" போன்றதாகும்.

மின்சாரம் என்பது மக்களது மிகமிக அவசியத் தேவை என்று கூறும் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள், அந்த மின்சாரத்தை அவர்கள் ஆட்சி காலத்தில் சரிவர வழங்காமல் தமிழ்நாட்டினை இருளில் ஆழ்த்திவிட்டு, அவர்கள் ஆட்சி காலத்தில் கொடுத்த அரைகுறை மின்சாரத்திற்கு எந்தவித சலுகையும் அளிக்காமல், தற்போது மின்சாரத்திற்கு சலுகை என கூப்பாடு போடுவது,

மக்களை திசை திருப்பும் நாடகம் மட்டுமே. அது ஒருபோதும் தமிழ்நாட்டு மக்களிடம் எடுபடாது.

**எதிர்க்கட்சித்தலைவர் அவர்களோ, நீதிமன்றமே ஏற்றுக்கொண்ட மின்கட்டண கணக்கீட்டு முறையை குளறுபடி என்கிறார். ஆனால் திமுக மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர்.எஸ். பாரதி அவர்களோ, நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தவில்லை என்கிறார். இப்படி முரண்பட்ட கருத்துகள், திமுக செய்யும் முரண்பாடான அரசியலை தெளிவாகக் காட்டுகிறது.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈரோட்டில் நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில், தமிழ்நாட்டில் மின் கட்டணம் எவ்வாறு கணக்கீடு செய்யப்படுகின்றது என்பது குறித்து விரிவாக தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

சலுகைகள் பற்றி பேசும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, கொரோனா காலத்தில் பொதுமக்களைக் காக்க மாண்புமிகு அம்மாவின் அரசு கொடுத்து வரும் சலுகைகளைப் பற்றி குறிப்பிடாமல் இருப்பது, முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்றதாகும்.

இருப்பினும் அவருக்கு இவ்வறிக்கையின் வாயிலாக மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வரும் சில சலுகைகளைப்பற்றி நினைவு கூற விரும்புகிறேன்.

- ஏப்ரல் மாதமே தமிழ்நாட்டில் **2.01** கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் நிவாரணமாக **1,000** ரூபாய் ரொக்கமாக வழங்கப்பட்டது.
- கட்டுமானத் தொழிலாளர்கள், உடல் உழைப்பு தொழிலாளர்கள் உள்ளிட்ட **17** அமைப்பு சாரா தொழிலாளர்கள், பட்டாசு தொழிலாளர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், திரைப்படத் தொழிலாளர்கள் உள்ளிட்ட **14** நல வாரிய தொழிலாளர்கள், தீப்பெட்டி தொழிலாளர்கள் என மொத்தம் **35.65** லட்சம் தொழிலாளர்களுக்கு தலா **2000** ரூபாய் ரொக்க நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகள் **13.35** லட்சம் பேருக்கு தலா **1000** ரூபாய் ரொக்க நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.
- முன்பு எப்போதும் இல்லாத வகையில், ஏப்ரல், மே, ஜுன், ஜுலை மாதங்களுக்கு அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய், பருப்பு போன்ற ரேஷன் பொருட்களை அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் வழங்கி வருகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு தான்.
- **13.59** லட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், சுமார் **87** ஆயிரம் ஓட்டுநர் தொழிலாளர் குடும்பங்களுக்கும், **2** மாதத்திற்கு கூடுதல் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

- ஊரடங்கு காலத்தில் தினமும், முதியோர், ஆதரவற்றோர், கர்ப்பிணி பெண்கள் போன்ற சுமார் 8 லட்சம் மக்களுக்கு, சுவையான, சூடான உணவு, அம்மா உணவகங்கள் மற்றும் சமுதாய சமையல்கூடங்கள் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று எண்ணிலடங்கா சலுகைகளை வழங்கி வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பையும், பேராதரவையும் பெற்று வருகின்றது. இதனைக் கண்டு பொறுக்க முடியாமல், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தான் அடிக்கடி கூறும் "வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ" என்ற முதுமொழிக்கு ஏற்ப தற்போது பேசியுள்ளது, அவருடைய மலிவான அரசியலை காட்டுகின்றது. உங்கள் ஆட்சிக் காலத்தில் இருண்ட தமிழ்நாட்டை கண்ட மக்கள் ஒருபோதும் இதனை நம்ப மாட்டார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இதை உங்களுக்கு வெகு விரைவில் தமிழ்நாட்டு மக்கள் மீண்டும் உணர்த்துவார்கள்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**